பக்கங்கள் நான்கு — விலை ரூபா 4-50

# முரசொலி

முரசு 05 — ஒலி 74 — பிரமோதூத — தை 27

(09 - 02 - 1991) — சனி

## வடக்கில் இருவாரத்தில் 22 முறை விமானத்தாக்குதல் நடைபெற்றது

வடபகுதியில் கடந்த இருவாரங்களிய் மட்டும் 22 தடவைகள் ஸ்ரீலங்கா விமானங்கள் குண்டு வீச்சுத் தாக்குதல் மேற்கொண்டுள்ள தாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இத்தாக்குதல்களில் வெளி மாவட்ட அகதிகளும், சிறுவர்களுமே அதிகமாக காயப்பட்டும் இறந்தும் உள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. புதுக்குடியிருப்பு. வல்வெட் டித்துறை, உருத்திரயுரம் ஆகிய பகுதிகளில் கடந்த இரு வாரத்திய் நடந்த விமானக் குண்டு வீச்சுகளினால்

—04 பக்கம் பார்க்க

# யாழ் ஜெய்ப்பூர் நிறுவனம் இம்மாதம் முதல் மூடப்படும்?

## செயற்கை அவயவங்களை அனுமதிக்க கூட்டுப்படைத் தலைமையகம் மறுப்பு

வடகிழக்கில் இயங்கிவரும் முக்கியஸ்தாபனங்களில்ஒன்றான ஜெய்ப் பூர் செயற்கைக்கால் பொருத்தும் நிறுவனத்துக்கு இனிமேல் அதன் கொழும்புத் தலைமையகத்தில் இருந்து உபகரணங்கள் கிடைக்காத தால் இது மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்குகிறது.

1987 முதல் யாழ்ப்பாணத் தில் இயங்கிவரும் இந்நிறு வனம் கொழும்பில் உள்ள 'நண்பர்கள் சங்கத்தின்' கிளையாகும்.

விபத்து, வன்செயல், போலியோ மற்றும் இராணுவ நடவடிக்கைகளால் அவயவங் களை இழந்தவர்களுக்கு செயற்கை உறுப்புக்களைப் பொருத்தி அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கும் பணியை இந்நிறுவனம் செய்து வருகிறது

யாழ் கிளை ஆரம்பிக்கப்படு முன் பாதிக்கப்பட்டவர்கள் இந்தியாவில் உள்ள ஜெய்ப் பூருக்கு அல்லது கொழும்புக் குச் சென்று அங்கு தங்கி

—04 ஆம் பக்கம் பார்க்க

## கஜூவத்தை ராணுவம் மீது புலிகள் தாக்குதல்

நேற்று முன்தினம் மன்னார் மாவட்டம் கஜூவத்தை முகாமில் இருந்து சிலாவத்தை முகாமிற்கு சென்ற இராணுவத்தினர் மீது புலிகள் மறைந்திருந்து திடீர் தாக்குதலை மேற்கொண்டனர் சேதவிவரம் தெரியவர வில்லை. (71)

## மாங்குளம் சேத விவரம் திரட்டப்படுகின்றது

மாங்குளத்தில் இராணுவத்தினரால் ஏற் பட்ட சேத விபரம் திரட்டப்படுகிறது.

கடந்த கால சம்பவங்களின் போது மாங் குளத்தில் இராணுவத்தினரால் சேதமாக்கப் பட்ட வீடுகள், அரச கட்டிடங்கள், தனியார் கட்டிடங்கள் பற்றிய சேத விபரங்கள் அப் பகுதி கிராம சேவகரால் திரட்டப்படுகிறது. (38)

## பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருள் விநியோகம்

வல்வெட்டித்துறையில் விமானத் தாக்கு தலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

பருத்தித்துறை வைத்திய சாலையில் படுகாயங்களுடன் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் மேற்படி பகுதி மக்களுக்கு பால்மா, சீனி, தேயிலை, மற்றும் சிறுவர் களுக்கான பால்மா வகைகளும் நிறுவனங் களால் வழங்கப்பட்டு வருகின்றன. (38)

## மந்திகை ஆஸ்பத்திரிக்கு நிதி சேகரிக்க அனுமதி தேவை

மந்திகை அரசினர்வைத்தியசாலை அபிவி ருத்திக்கு.நிதிஉதவிவழங்கவிரும்புவர்கள் ஆஸ் பத்திரிஅபிவிருத்திச் சபையினூடாகவே வழங் குமாறு மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ். கதிர்வேற்பிள்ளை அறிவித்துள்ளார்.

எவரும் ஆஸ்பத்திரிக்காக நிதி சேகரிக்க முடியாது எனவும், அவ்வாறு சேகரித்தால் தண்டனைக்குரிய குற்றமாகும் எனவும் ஆஸ் பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன (15)

## வயோதிபர் வீதியில் மரணம்

கைதடி வயோதிபர் இல்லத்தில் இருந்து லீவில் வெளியேறிய வயோதிபர் ஒருவர் நாயன்மார்கட்டில் வீதியோரமாக மயங்கி விழுந்து பின்னர் மரணமானார்.

இவரது சடலத்துக்கு நேற்று இரவு வரை எவரும் உரிமை கோரவில்லை.

நாயன்மார் கட்டு பகுதி மக்கள் மயங்கி விழுந்த உடனே முதலுதவி அளித்தமை குறிப்பிடத்தக்கது. (33,71,ப11)

## வீரமரணம்

நேற்றுக்காலை வவுனியா மாவட்டத்தில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் அஜந் தன் (சின்னையா - சூரியகுமாரன், செட்டிக் குளம்) வீரமரணமடைந்தார். இவருக்கு விடு தலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (71)

## தெற்கிற்கு வெங்காயம் எடுத்துச் செல்ல வவுனியா இராணுவம் அனுமதி!

கொழும்பு செல்லும் யாழ் பயணிகள் அங்கு தட்டுப் பாடாக உள்ள பொருள்களை எடுத்துச் செல்ல வவுனியா ராணுவம் அனுமதி வழங்கு கிறதாம்.

யாழ்ப்பாணத்தில் இருந்து செல்லும் வெங்காயத்திற்கு தற்போது தென்பகுதியில் தட்டுப்பாடு நிலவுகிறது. வெங்காயத்தின் விலையும் அங்கு உயர்ந்துள்ளது. இதை யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு செல்ல வவுனியா தடை முகாமில் உள்ள ராணு வத்தினர் ஊக்கமளிப்பதாக வும் பயணிகள் தெரிவிக்கின் றனர். (70)

## பட்டிருப்புப் பாலமருகே கண்ணிவெடி இராணுவ கவசவாகனம் சேதம்

மட்டக்களப்பில் நடை பெற்ற கண்ணிவெடிச் சம்ப வம் ஒன்றில் இராணுவத்தின ரின் கவசவாகனம் ஒன்று சேதமடைந்துள்ளது.

கடந்த புதன் மாலை ஆறு மணியளவில் வெல்லாவெளி யில் உள்ள முகாமில் இருந்து களுவாஞ்சிக்குடி முகாமிற்கு சென்ற இராணுவத்தினர் மீது பட்டிருப்புப பாலமருகே புலிகள் கண்ணிவெடி தாக்கு தலை நடாத்தினர்.

ஜீப், ட்ரக், கவசவாகனம் சகிதம் சென்ற மேற்படி இராணுவத்தினரின் கவச வாகனம் கண்ணிவெடியில்

—04 ஆம் பக்கம் பார்க்க

## 262 குடும்பங்களுக்கு 15 லீற்றர் மண்ணெண்ணெய்

அச்சுவேலிப் பகுதியில் உள்ள கூட்டுறவுச் சங்கக் கிளை ஒன்றில் 262 குடும்பங் களுக்கு 15 லீற்றர் மண் ணெண்ணெயும், 2 கிலோ மிளகாயும் வழங்கப்பட்டுள் ளது.

இதனால் இவற்றைப் பங் கீட்டு முறையில் வழங்க முடியாத கிளை முகாமையா ளர் தர்மசங்கடமான நிலை யில் உள்ளனர். (36)

### யாழ் ஆஸ்பத்திரிக்கு பற்றரிகள்

## கூட்டுப்படை அலுவலகம் அனுமதி வவுனியா இராணுவம் மறுப்பு

கூட்டுப்படைத் தலைமைய கம் யாழ் போதனா வைத் தியசாலைக்கு "பற்றரிகளை" கொண்டு வர அனுமதிப்பத் திரம் வழங்கியுள்ளது.

ஆனால்கொழும்பில்இருந்து யாழ் எடுத்துவரும் வழியில் வவுனியாவில் வைத்து இரா ணுவத்தால் முழு பற்றரி களையும் பறிமுதல் செய்யப்

...04 ஆம் பக்கம் பார்க்க

## ஈராக் மக்கள் கொல்லப்படுவதற்கு அரசு துணைபோவதாக சுதந்திரக்கட்சி

வளைகுடா செல்லும் அமெரிக்க விமானப்படை விமானங்களுக்கும், கப்பல் களுக்கும் ஸ்ரீலங்கா அரசு எரிபொருள் வழங்க அனுமதி

—04 ஆம் பக்கம் பார்க்க

# சுயவிருப்பில் ஒய்வுபெறவுள்ள அரச ஊழியர்களுக்கு
# ஒரு வருட சம்பளம் போனஸ் ஆகக் கிடைக்கும்!

சுயவிருப்பின் பேரில் ஒய்வு பெறுவதற்கு விண்ணப்பித்த அரச ஊழியருக்கு முன்னர் அறிவிக்கப்பட்டதை விட இருமடங்கு தொகையைப் போனஸ் கொடுப்பனவாக வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அறியப்படுகின்றது.

முன்னர் விசேட திட்டத்தின்கீழ் ஒய்வுபெற முன்வருபவர்களுக்குஆறுமாத போனஸ் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால்தற்பொழுது ஒருவருடபோனஸை ஒய்வு பெற விண்ணப்பித்தவர்களுக்கு வழங்க அரசஉயர் மட்டத்தில் ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது.

அத்துடன் சுயவிருப்பின் கீழான ஒய்வு பெறுதலுக்குரிய விண்ணப்பங்களை இவ் வருடம் ஜூன் மாதம் வரை தொடர்ந்து ஏற்பதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளதாகவும் இவைபற்றிய உத்தியோக பூர்வ அறிவிப்புக்கள் விரைவில் வெளியிடப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் ஒய்வு பெற, அரசு எதிர்பார்த்த அளவு ஊழியர்கள் விண்ணப்பிக்காததை அடுத்தே இச்சலுகைகளை வழங்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.

உலக வங்கியின் ஆலோசனையுடன் செயற்படுத்தப் படுவதாகக் கூறப்படும் இத்திட்டத்தின் கீழ் ஒய்வு பெற இது வரை சுமார் 37000 பேர் மட்டுமே விண்ணப்பித்துள்ளனர். (ப-1)

## சிறு விளம்பரம்


தேவை

பெண்கள், சிறுவர்கள், குழந்தைகள் அனைவரதும் உடைகளை மிகவும் நாகரிகமான முறையில் வெட்டித்தைத்துக் கொடுக்கக்கூடிய பெண் டெயிலர் உடனடியாகத் தேவை. நேரில் வரவும். ''திருமகள் டிரேடர்ஸ்'' (கல்வியங்காடு பெற்றோல்செற் எதிரில்) கல்வியங்காடு சந்தையடி கல்வியங்காடு. 02056


## பார்த்தசாரதியின் நினைவாக...

ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் கீதோபதேசம் செய்த பார்த்தசாரதியின் தேர் முகப்பை நுழைவாயிலாகக் கொண்ட நாலுநிலையைம்ஒன்று அமைக்கப்படவுள்ளது. (15)

## நியூஸிலாந்து மீண்டும் வெற்றி

இலங்கை - நியூஸிலாந்து அணிகளுக்கிடையில் நேற்று முன்தினம் நியூஸிலாந்தில் இடம் பெற்ற ஒருநாள் மட்டுப் படுத்தப்பட்ட ஒவர் சர்வதேச கிரிக்கட் போட்டியில், மீண்டும் நியூஸிலாந்து அணி இலங்கை அணியை வெகு சுலபமாக தோற்கடித்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய நியூஸிலாந்து அணி 50 ஒவர்களில் 6 விக்கற்றுக்களை மாத்திரம் இழந்து 273 ஓட்டங்களைக் குவித்தது.

இலங்கை அணி அதன் துடுப்பாட்டத்தில் 35 ஒவர்களிக் சகல விக்கற்றுக்களையும் ஒன்றன்பின் ஒன்றாக துரிதகெதியில் இழந்து 165 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. இதில் அரவிந்த டீ. சில்வா பெற்ற ஓட்டங்கள் 50: மற்ற எந்த வீரராவது குறிப்பிடும்படி ஓட்டங்களைப் பெறவில்லை

இப்போட்டித் தொடரில் இதுவரைநடைபெற்ற 2 ஒருநாள் போட்டிகளிலும் நியூஸிலாந்து அணியே வெற்றிபெற்றுள்ளது என்பதும் ஐந்து நாள் டெஸ்ற்போட்டி வெற்றி தோல்வியின்றி டிரோவில் முடிவுற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (16)

## தியாகராஜருக்கு நினைவாலயம்

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான தியாகராஜருக்கு திருவையாறில் நினைவாலயம் அமைக்கப்படுகிறது. இந்த நினைவாலயம் தம்பூரா வடிவத்தில் இருக்கும். எழுபது லட்சம் இந்திய ரூபாவில் அமைய இருக்கும் இந்த நினைவாலயத்திற்கு எம். எஸ். சுப்புலக்ஷ்மி, மன்டொலின் சீனிவாசகன் ஆகியோர் போன்றோரிடமிருந்து நன்கொடைகள் குவிய ஆரம்பித்துவிட்டன.

## மீசாலையில சிறுவன் பலி

நேற்று முன்தினம் மாலை கொடிகாமம், மீசாலைப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பொம்பர், ஹெலிச் சூட்டுத் தாக்குதலில் சிறுவன் ஒருவர் கொலைப்பட்டார். பல வீடுகள், கடைகள் மற்றும் அரிசி ஆலை ஒன்று என்பன சேதமுற்றன.

மாலை 6 30 மணிபோல் இரு பொம்மர்கள் மீசாலையில் மேற்கொண்ட தாக்குதலில் வீடொன்றில் இருந்த பளையைச்சேர்ந்த 16 வயதினையுடைய சுரேஷ் என்ற சிறுவனே மரணமானார் வீடும் சேதமுற்றது.

இதே நேரம் கொடிகாமத்தில மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் சில கடைகள் சேதமுற்றன. (ப-5,ப-32)

## புதிய ரயில் பெட்டிகள் 20 ஆம் திகதி முதல் சேவையில்

இறக்குமதி செய்யப்பட்ட புதிய ரயில் பெட்டிகளையும், என்ஜின்களையும் புகையிரதப் பகுதி இம் மாதம் 20ஆம் திகதிமுதல் சேவையிலீடுபடுத்தவுள்ளது.

ஜப்பானிலிருந்து இதற்கென 20 ரயில் பெட்டிகள் 300 கோடி ரூபா செலவில் இறக்குமதி செய்யப்படவுள்ளன.

## மாணவர் ஒன்றிய புதிய தேரிவு

யாழ் பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய நிர்வாகத்தர் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

இதில் தலைவராக அ.இ.மரியநாயகம்மும் உபதலைவராக கே.கிரிதரனும்,செயலாளராக செல்வி ச. வசந்தியும், இளம் பொருளாளராக செல்வி லோ. சுமித்திரையும் பத்திரிகைபராக செல்வி பொ. பவானியும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிர்வாகத் தெரிவானது கலை, விஞ்ஞான, விவசாய பீடங்களைச் சேர்ந்த மாணவர் ஒன்றியத்தின் பிரதிநிதிகளிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. (71)


## நினைவஞ்சலி





அமரர்
சின்னப்பு செல்லையா

தோற்றம்
08 — 03 — 1917

மறைவு
21 — 12 — 1990

செல்வி றெஜினா சின்னத்துரை
(மாணவி இந்துக்கல்லூரி - சாவகச்சேரி)

மலர்வு
06 — 03 — 1977

உதிர்வு
27 — 12 — 1990

உங்கள் நினைவலைகள் எம்மை விட்டு நீங்கவில்லை. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!
உங்கள் பிரிவால் துயருறும்:

மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

131, D. 10
உருத்திரபுரம்.

அப்பா, அம்மா, தம்பிமார், எழில்வேள், கிஷ்ணவேள்,
உற்றார், உறவினர்கள்.

''வசந்தபவனம்''
மருதடி மேற்கு
சாவகச்சேரி

02053

# 25 ஆயுர்வேத வைத்தியர்கள் சுகாதார வைத்திய அதிகாரிகளாக நியமனம்!

## தெரிவானோரில் ஒருவர் மட்டுமே தமிழர்; தமிழ்ப்பகுதிகளும் புறக்கணிப்பு!!

சுதேசிய வைத்தியர்களைச் சுகாதார வைத்திய அதிகாரிகளாக நியமிக்கும் புதிய திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக 25 ஆயுர் வேத வைத்தியர்கள் சுகாதார அமைச்சினால் அரச சுகாதார வைத்திய அதிகாரிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள இந்த ஆயுர்வேத வைத்தியர்களுக்குத் தற்பொழுது கொழும்பில் நிர்வாகத்துறைப் பயிற்சி வழங்கப் பட்டு வருகின்றது.

சுகாதார வைத்திய அதிகாரிகளாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ள 25 பேரில் ஒருவர் மட்டுமே தமிழர். அவரும் கொழும்பு மாவட்டத்திலிருந்தே தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழ் மாவட்டங்களுக்கென இப்புதிய திட்டத்தின்கீழ் சுகாதார வைத்திய அதிகாரிகளாக எவரும் தெரிவு செய்யப்படவோ அல்லது நியமிக்கப்படவோ இல்லை.

இதனால் அரசின் புதிய திட்டம் ஆரம்பத்திலேயே தமக்கு ஏமாற்றத்தைத் தந்துவிட்டதாகத் தமிழ்பேசும் சுதேசிய வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

### கிணற்றில் விழுந்து சிறுவன் பலி

முகம் கழுவுவதற்காகக் கிணற்றடிக்குச் சென்ற சிறுவன் கிணற்றுக்குள் தவறி விழுந்து மரணமானான்.

நேற்று பண்டத்தரிப்பு பிரான்பற்றில் இச்சம்பவம் நடைபெற்றது.

சிங்கராசா காண்டீபன் என்ற எட்டுவயதுச் சிறுவனே இவ்வாறு மரணமானவராவார். (70)

### யாழ் தம்பதிகள் கட்டுநாயக்காவில் கைது !

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தம்பதிகள் லண்டனுக்குச் செல்லவிருந்த சமயம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வைத்து இரகசியப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் இருவரும் போலி விஸா, கடவுச் சீட்டுக்களுடன் பயணம் செய்யத் தயாராக இருந்தபோதே கைது செய்யப்பட்டதாகப் பொலிஸ் பகுதியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இவர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

### இடமாற்றம் பெற்று இரு வாரத்தினுள் சுயவிவரக் கோவைகளை அனுப்பப்பணிப்பு

ஒரு பிரதேசத்தில் இருந்து இன்னொரு பிரதேசத்துக்கு இடம்மாறிச் சென்ற ஆசிரியர்களின் சுயவிவரக்கோவை, சம்பள விவரங்களைச் சம்பந்தப் பட்ட திணைக்களங்கள், ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்ற திகதியில் இருந்து இரண்டு கிழமையினுள் அனுப்பி வைக்க வேண்டும் என கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளர் மாவட்டக் கல்விப் பணிப்பாளர்களுக்கு சுற்றுநிருபம்மூலம் பணித்துள்ளார்.

அப்படி அனுப்பாது போனால் அதற்கான காரணத்தை இடமாற்றம் பெற்ற திணைக்கள அதிகாரிக்குத் தெரியப்படுத்த வேண்டும் எனவும் பணிக்கப்பட்டுள்ளது. (ப-17)

### மதிப்பீட்டுப் பரீட்சை ஒத்திவைப்பு

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ் பிராந்திய நிலையத்தில் உயர் தொழில் ஆங்கிலக் கற்கைநெறியினைப் பயில விண்ணப்பித்தோருக்கு நடாத்தப்படவிருந்த மதிப்பீட்டுப்பரீட்சை பின்போடப் பட்டுள்ளது

இப்பரீட்சை 17ஆம் திகதி காலை 10 மணிக்கு நடாத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கற்கை நெறியினைப் பயில்வதற்குச் சுமார் 200 பேர் விண்ணப்பித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ப-7)

### கிளிநொச்சியில் மானிய விலைக்கு தெங்கு நாற்று விநியோகம்

கிளிநொச்சி மாவட்ட விவசாயிகளுக்கு மானிய அடிப்படையில் தெங்கு நாற்றுக்கள் விநியோகிக்கப்படவுள்ளன.

கிளிநொச்சி அரச செயலக காணிப்பகுதி இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

10 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படும் தெங்குநாற்று மானிய அடிப்படையில் 5 ரூபாவிற்கு வழங்கப்படவுள்ளது. ஒரு வீட்டுத் தோட்டத்திற்கு ஆகக்கூடுதலாக 10 நாற்றுக்களே வழங்கப்படும்.

இம்மாதம் 20 ஆம் திகதிக்கு முன் முற்பணத்துடன் முற்பதிவுகள் கிராம சேவையாளர்கள் மூலம் செய்து கொள்ளல் வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-6)

### மொஸாட் விவகார விசாரணை: ஜே. ஆரின் மருமகளும் அழைப்பு

கடந்த காலங்களில் இஸ்ரேலிய உளவு நிறுவனமான மொஸாட் இலங்கையுடன் கொண்டிருந்த தொடர்புகள் குறித்து ஆராய நியமிக்கப் பட்ட நீதியரசர் எஸ். டபிள்யூ. வடுகொட பிட்டிய தலைமையிலான ஆணைக் குழுமுன் சாட்சியமளிக்க முன்னாள் ஜனாதிபதியின் மருமகள் பெனி ஜயவர்த்தனா அழைக்கப்படவுள்ளார்.

பெனி ஜயவர்த்தனா இஸ்ரேல் நாட்டிற்கு விஜயம்செய்த பொழுது அவரைப் பாதுகாப்பாக அழைத்துச் செல்லும் பணிக்குத் தாம் அமர்த்தப்பட்டதாக முன்னாள் மொஸாட் அதிகாரியான விக்டர் ஒஸ்ரோவிஸ்க்கி தனது நூலில் குறிப்பிட்டுள்ளதாலேயே அவர் சாட்சியத்துக்கு அழைக்கப்படவுள்ளார் எனத் தெரிகிறது.

நீதியரசர் வடுகொட்பிட்டிய ஆணைக் குழுமுன் சாட்சியமளிக்க அழைக்கப்பட வேண்டியசிலர் தற்பொழுது வெளிநாடுகளில் தங்கியிருப்பதால் அவர்களை ஆணைக்குழு முன் அழைக்க சட்டமா அதிபர் திணைக்களம் இண்டர் போல் நிறுவனத்துடன் தொடர்பு கொண்டுள்ளது. (ப-1)

### கைது தவிர்க்க முடியாததாம்

கொழும்பிற்கு செல்லும் வட—கிழக்குத்தமிழர் விசாரணைகளுக்கு உட்படுதப் படுகின்றமையை தவிர்க்க முடியாதென பொலிஸ் உயர்பீடம் தெரிவித்துள்ளது

தற்பொழுது கொழும்பில் அமுலில் உள்ள விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளில் வட—கிழக்குத்தமிழர் மீதான விசாரணை அம்சமும் உள்ளடங்கியுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

### வவுனியாவில் புதிய நடைமுறை

வவுனியா நகரில் மண்ணெண்ணெய் ஒரு லீட்டர் 12 ரூபாவிற்கு மேல் விற்பனை செய்யமுடியாது எனவும் அதிகாரம்பெற்ற வர்த்தகர்கள் மட்டுமே விற்பனை செய்யலாம் எனவும்கச்சேரி உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

### புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்றால் 2,500 ரூபா பணப்பரிசும் கிடைக்கும்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ள வறுமை நிலையிலுள்ள மாணவர்களுக்கு 2500 ரூபா பணப் பரிசிலை வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இது தவிர இந்த புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு வழமைபோல் உயர் பாடசாலைகளில் அனுமதியும் வழங்கப்படும்.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்கள் அனைவருக்கும் பிரபல பாடசாலைகளில் அனுமதி வழங்கக்கூடிய வகையில் அனுமதிப்புள்ளியின் மட்டத்தைக் குறைக்கவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

### 6000 ஏக்கர் தரிசு நிலத்தில் உப-உணவுச் செய்கை

ஆறாயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் உப உணவு தானியங்கள் விளைவிக்க யாழ் மாவட்டத்தில் அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன்படி காலபோக அறுவடையின் பின்னர் பயறு, கௌபி, எள்ளு போன்றவற்றைப் பயிரிட கமநல சேவைத் திணைக்களம் உதவி அரசாங்க அதிபர்கள் மற்றும் பொதுசனநிலையங்கள் ஆகியவற்றின் ஆலோசனையுடனும், உதவியுடனும் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இது சம்பந்தமாக யாழ் அரசாங்க அதிபர் தொண்டர் ஸ்தாபனங்கள் உதவியுடன் இத்திட்டத்தை மேலும் அபிவிருத்தி செய்யஉத்தேசித்துள்ளார். (66)


### வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி

எங்கள் நிதி நிறுவனம் 1988 ஆம் ஆண்டின் 78ஆம் இலக்க நிதி நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் இலங்கை மத்திய வங்கியினால் பதிவ செய்யப்பட்டுள்ளது என் பதனை மகிழ்ச்சியுடன் அறியத் தருகிறோம்.
Licence No NBS / R / 90 / 021

ஷப்றா யுனிக்கோ பினான்ஸ் லிமிட்டெட்

207 மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

61 நியூ புல்லர்ஸ் வீதி,
கொழும்பு - 4.

02059

# தரைத் தாக்குதலுக்கு தயார் என்கிறது ஈராக்

# இதுதருணம் அல்லஎன நேசநாட்டுப் படைகள்

ஈராக்கிற்கு எதிரான தரைத் தாக்குதலை ஆரம்பிப்பது குறித்தான சாத்தியக் கூறுகளை ஆராய அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் டிக் செனியும் தளபதி ஜெனரல் கொலின்ஸ் பவலும் சவுதி அரேபியா சென்றடைந்துள்ளனர்.

ரியாட்டில் செய்தியாளர்களிடையே பேசிய அமைச்சர் செனி, தரைத்தாக்குதல் ஆரம்பிப்பின் அமெரிக்க நேச நாட்டுப் படையணியில் எவ்வளவுக்கு உயிரிழப்பை தவிர்க்க முடியுமோ அந்நிலைக்கு உயிர்ழப்பை குறைக்க முயற்சிக்க வேண்டும் என்பதே எமது நோக்கம் என்றார்.

இதேவேளை தரைத்தாக்குதல் ஆரம்பிக்க இது சரியான தருணமா என்பது குறித்து சரியான முடிவு எடுக்க முடியவில்லை என அமெரிக்க வளைகுடாத் தளபதி ஜெனரல் ஷ்குவாஸ்கோவ் குறிப்பிட்டார். தரைப் போர் தவிர்க்க முடியாத ஒன்றாகி வருகிறது என வளைகுடாவின் பிரிட்டிஷ் தளபதி கூறுகிறார். தரைப்போரை ஆரம்பிக்க நாம் தயாராக இருக்கின்றோம் எனக் குறிப்பிட்ட ஈராக் தளபதி ஆனால் எதிரிகள் தாக்குதலை தரையில் ஆரம்பிக்காது எமது பொறுமையை சோதித்து வருகின்றனர் எனக் கூறுகிறார்.

### தொடர்ந்து விமானத்தாக்கு

நேற்று தொடர்ந்தும் ஈராக்கின் கடல்கரையோர நகர்களான பாஸ்ரா, பாவோ ஆகியவை மீது அமெரிக்க நேச நாட்டுப் படைகளின் விமானத் தாக்குதல் நடைபெற்றது.

## கணக்காய்வு செய்யப்படாததால் இவ்வாண்டு நிதி வழங்கப்படவில்லை

யாழ்ப்பாண மாநகரசபையின் 1989-ம் ஆண்டுக்கான கணக்குகள் கணக்காய்வாளர் திணைக்களத்தால் கணக்காய்வு செய்யப்படாததால் 1991-ம் ஆண்டுக்கான நிதி வழங்கப்படமாட்டாது என கொழும்பில் வைத்து யாழ் மாநகர ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் மாநகர அபிவிருத்தி வேலைகள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளது என ஆணையாளர் அச்சம் தெரிவித்துள்ளார். (36, ப11)

கருணாநிதி சொல்கிறார்

## தி. மு. க. தேர்தலில் போட்டியிடும் கவலையினால் முன்னர் தவறாக கூறினேன்

எதிர்வரும் தமிழக சட்டப் பேரவை தேர்தலில் தி. மு. க வும் போட்டியிடும் என முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்றுத் தெரிவித்தார்.

மத்திய அரசு காரணமின்றி தமிழக அரசைக் கலைத்துவிட்ட கவலையினாலேயே தி. மு. க எதிர்காலத்தில் தேர்தலில் போட்டியிடமாட்டாது என முன்னர் தாம் தவறாக கூறியதாக கருணாநிதி அப்போது கூறினார்.

பிரதமர் சந்திரசேகர் ஆட்சியில் இருக்கும் வரை தி. மு. க தேர்தலில் பங்குபற்றமாட்டாது என கருணாநிதி தமிழக அரசு கலைக்கப்பட்ட மறுநாள் கூறியமை தெரிந்ததே.

---

## 62 தபாற் பொதிகள் சென்றன

பருத்தித்துறையிலிருந்து கொழும்பு செல்லும் கப்பலில் யாழ் குடாநாட்டுத் தபாலகங்களிலிருந்து சேகரிப்பட்ட 62 தபாற் பொதிகள் அனுப்பிவைப்பதற்காக நேற்றுயாழ் பிரதம தபாலகத்தினரால் பருத்தித்துறைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (33)

## நீதிமன்றத்தில் சுட்டுக்கொலை

கல்கிஸ்ஸ நீதிமன்றத்தில் வைத்து கொலை வழக்கு சந்தேக நபரை இனம் தெரியாத ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக்கொலை செய்தார் சுட்டவர் மோட்டார் சைக்கிளில் தப்பி ஓடிவிட்டார்.

நீதிமன்றத்திலிருந்து சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட வாகனத்தில் ஏற்றப்படும் போதே இச்சம்பவம் நிகழ்ந்தது.

---

## ஜனாதிபதி பிரேமதாஸ பாகிஸ்தானுக்கு அன்பளிப்பு

பூமி அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தான் மக்களுக்கு வழங்கவென ஜனாதிபதி பிரேமதாஸ நேற்று இலங்கையின் சார்பில் ஒரு தொகுதி உணவுப்பொருட்களை பாகிஸ்தான் தூதுவரிடம் கையளித்தார்.

## 'கெல்ற்' மாணவர்க்கு பயிற்சி கொடுப்பனவு

மானிப்பாய் இந்துக்கல்லூரி நிலையத்தில் பொது ஆங்கில பயிற்சி திட்டத்தில் 'கெல்ற்' பயிற்சி பெற்ற பல்கலைக்கழக மாணவர்களுக்கான தொழிற்பயிற்சி கொடுப்பனவு நாளை பிற்பகல் 3 30 மணிக்கு வழங்கப்படும் என போதனாசிரியர் திரு. தெய்வதவபாலன் அறிவித்துள்ளார்.

## வெளிநாடு செல்லவிருந்த தமிழர் கொழும்பில் திடீர் கைது

கொழும்பில் தமிழ் குழுவொன்றுடன் பொலிசார் நடாத்திய தேடுதல் வேட்டையில் அப்பாவித் தமிழர் பலர் விடுதிகளில் இருந்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஒரு விடுதியில் மட்டும் 20பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் வெளிநாடு செல்வதற்காக ஏஜன்ஸிகளுக்கு பணம் செலுத்தியவர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (66)

## ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

யாழ் செயலகத்தில் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தை மாதம் ஒரு முறையாவது நடாத்துவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட அபிவிருத்தி வேலைகளை ஒருங்கிணைப்பதற்கென திணைக்களங்கள் தமது ஆலோசனைகள், திட்டங்கள் என்பனவற்றை அறிவித்தால் சம்பந்தப்பட்ட திணைக்களங்களிலிருந்தோ, ஸ்தாபனங்களிலிருந்தோ அவற்றைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

இயலுமானவரை திணைக்களத் தலைவர்கள் யாழ் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ப11, 36)

## விபத்தில் சிக்கி மரணம்

கொழும்பிலிருந்து யாழ் நோக்கி வந்த 30 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவர் நேற்று மாலை பூநகரியில் இடம்பெற்ற லொறி விபத்தில் தலை துண்டிக்கப்பட்ட நிலையில் ஸ்தலத்தில் மரணமானார். (ப-11,33)

## பின்தங்கிய கிராமங்கள் அபிவிருத்தி செய்யப்படும்

யாழ் மாவட்டத்தில் பின்தங்கிய வசதிகள் குறைந்த கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான செயற்திட்டங்களை மேற்கொள்ளுவதற்கான நடவடிக்கைகளை யாழ் மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மேற்கொண்டுள்ளார்.

பன் முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் இவ்அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படும். (36)

---

**யாழ்...**

யிருந்து சிகிச்சைபெறவேண்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

இதுவரை யாழ்ப்பாணத்தில் 448 செயற்கைப்பாதங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த மனிதாபிமான பணிக்கு உதவும் முகமாக நொறாட், டயகோனியா, சிறுவர் பாதுகாப்பு நிதியம் முதலிய வெளிநாட்டு நிறுவனங்கள் நிதியுதவி செய்து வருகின்றன.

கடந்த வாரம்கூட கொழும்புத் தலைமையகத்துக்கு 5லட்சம் ரூபா நன்கொடையாக கிடைத்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் முதல் வடபகுதி மக்கள் பலர் அங்கவீனர்களக்கியுள்ள போதும், நாற்பது பேருக்கு மட்டுமே செயற்கைக்கால் பொருத்தப்பட்டது.

கொழும்பில் இருந்து வரும் உபகரணங்களை அனுமதிக்க கூட்டுப்படைத் தலைமையகம் மறுத்துவருவதை இத்தேக்க நிலைக்கு காரணமாகும்(ப-11

**ஈராக்...**

வழங்கியதை ஶ்ரீலங்கா சுதந்திரக்கட்சி கண்டித்துள்ளது

ஈராக்கின் அப்பாவிப் பொதுமக்களை கொலை செய்யும் அமெரிக்க விமானங்களுக்கு பிரேமதாஸ அரசு துணைபோகின்றது எனவும் சுதந்திரக்கட்சி தனது கண்டனத்தில் குறிப்பிட்டுள்ளது

**வடக்கில்...**

பெருந்தொகையான மக்கள் பலியானமையும் இங்கு சுட்டிக்காட்டப்படுகிறது. பொது மக்களின் சொத்துகளிற்கும் இவ்விமானத்தாக்குதல்களினால் பெருமளவு சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ப-11)

**கட்டிருப்பு...**

இக்கிலத்த சேதமடைந்தது. இதில் பயணம் செய்து கொண்டிருந்த இராணுவச் சிப்பாய்கள் அனைவரும் பலியாகியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. (71)

**கூட்டுப்படை :**

பட்டுள்ளது என போதனா சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (74)

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷேர்ஸ் (பிறைவேட்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கஸ்தூரியார் வீதி, 'லக்ஷ்மிபில்டிங்ஸ்' உள்ள அச்சகத்தில் 09-02-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.